முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.147/2017**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 25.09.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 25.09.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சிவகாமசுந்தரி | வயது.. | 54 |
| கணவர் பெயர்.. | ராஜரத்தினம் | கிராமம்.. | ஸ்ரீவாக்காரமாரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. நான் குடியிருந்து வருவது ஸ்ரீமுஷ்ணம் மேல்கொடிகால் தெரு. நான் எத்தனை வருடங்களாக அங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் புது வீடு கட்டி சுமார் 13 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் விநாயக மூர்த்தி எத்தனை வருடங்களாக அங்கு குடியிருந்து வருகிறார் என்றால் தெரியாது. 1995 மற்றும் 2010 ஆகிய வருடங்களில் தான் ஸ்ரீமுஷ்ணம் மேல்கொடிகால் தெருவில் மனை வாங்கினேன் என்றால் சரிதான். நான் மனை வாங்கும்போது பிரதிவாதி எங்கு குடியிருந்தார் என்றால் என் மனைக்கு எதிரில் ஓட்டு வீட்டில் குடியிருந்தார். தற்போது பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்றால் என் மனைக்கு கிழக்கால் 3 வருடத்திற்கு முன்பு புது ஷெட் அமைத்து அதில் குடியிருந்து வருகிறார். 1ம் பிரதிவாதி அவருடைய குடும்பத்துடன் தான் அங்கு வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

2. ஸ்ரீமுஷ்ணம் மேலகொடிகால் தெருவின் பரப்பளவு தெரியுமா என்றால் சுமார் 20-25 அடி. நான் கிரயம் வாங்கிய இரண்டு மனையும் ஆசாரி தொழில் செய்யும் நபரிடம் இருந்து வாங்கினேனா என்றால் இல்லை. எந்த வருடத்தில் நான் புது வீடு கட்டி அங்கு குடியேறினேன் என்றால் 2012 அல்லது 2013. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி மரம் அறுக்கும் ஆலையின் நிர்வாகி என்று

சொல்லியநிலையில் அது அவர் அங்கு நிர்வாதியாக தான் உள்ளார் என்றால் மரம் இழைப்பகம். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மரம் அறுக்கும் ஆலையை பற்றி சொல்லியுள்ள தற்போது இழைப்பகம் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை இழைப்பகம் தான் உள்ளது. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 10 முறை மரம் அறுக்கும் ஆலை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. தற்போது 1ம் பிரதிவாதி என்ன ஆலை வைத்துள்ளார் என்றால் மரம் இழைப்பகம்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif,
Chidambaram.